DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.1 | Caste | : | |
| Name | | தேவி | Age | | |
| Husband Name | : | பாண்டிச்செல்வம் | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 12.10.2022

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை தெரியும். காத்தான்விடுதியை சார்ந்தவர்கள். 21.09.2019 ம் தேதியன்று என்னுடைய மாமா முருகையாவும் என்னுடைய கணவர் பாண்டிச்செல்வமும் எங்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நீலகண்டமூர்த்தி அங்கு வந்து பாதை பிரச்சினை 5 வருடமாக இருக்கும் போது நீ எங்கடா வீடு கட்டுறா, உனக்கு பாதை விட முடியாது என்று என் கணவர் பாண்டிச்செல்வத்திடம் தேவுடியா என்று கொச்சையாக பேசி உன்னைக் கொல்லாமல் அவர்கள் வீட்டில் இருந்து விடமாட்டேன் என்று மேற்படி நீலகண்டமூர்த்தி கேட்டதுடன் அவருடன் அவருடைய அப்பா ஆறுமுகமும் அங்கு வந்து அவர்கள் வீட்டில் இருந்து எடுத்து வந்த 2 கட்டைகளை கொண்டு இன்று நீதிமன்றத்தில் காட்டப்படும் 2 கட்டைகளை கொண்டு தான் நீலகண்டமூர்த்தியும் ஆறுமுகமும் என் கணவர் பாண்டிச்செல்வத்தை அடித்தார்கள். நீலகண்ட மூர்த்தி என் கணவரை கட்டையால் பின் மண்டையில் அடித்தார். ஆறுமுகம் கட்டையால் பின் பக்க முதுகிலும் இடுப்பிலும் அடித்தார். என் கணவருக்கு இரத்தம் கொட்டியது. என் பிள்ளைகளை ஏன்டா அடிக்கிறீர்கள் என்று கேட்ட போது அவரை ஆறுமுகம், பழனியம்மாள், நீலகண்டமூர்த்தி ஆகியோர்கள் என் மாமனாரை இடது தோள்பட்டையிலும் வலது பக்க முகத்திலும் கட்டையால் அடித்தார்கள். என் மாமனாருக்கு இரத்தம் கொட்டியது. என் புருசனை என் கண் முன்னாலேயே அடித்து கொன்றார்கள். இதை நேரில் கண்ணால் பார்த்தேன். 1 லிட்டர் அளவுக்கு மேல் இரத்தம் அங்கேயே என் கணவருக்கு வெளியாகி விட்டது. அவரை தூக்கி நிருத்துவதற்கு கூட அங்கு ஆள் கிடையாது. என் கணவர் சரிந்து விழவும் என் கணவரைப் பார்ப்பதா என் பிள்ளைகளை பார்ப்பதா என்று நான் இருந்ததால் குறிப்பிட்டு எந்தெந்த கட்டையால் எந்தெந்த எதிரிகள் தாக்கினார்கள் என்று என்னால் சொல்ல இயலவில்லை. பிறகு எங்கள் ஊரை சார்ந்த ரெங்கசாமி மகன் மாரிமுத்து அங்கு வந்து என் கணவரை இருசக்கர வாகனத்தில் வைத்து ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கே முதல் உதவி சிகிச்சை

அளித்து ஊசி போட்டார்கள். பிறகு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அழைத்து செல்லும்படி சொன்னார்கள், என் கணவருக்கு அதிகமான காயம், ஆபத்து இருந்ததால் நாங்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம், அங்கு மருத்துவர் சிகிச்சை அளித்தார், மறுநாள் 22.09.2019 தேதியன்று ஆலங்குடி போலிசார் மருத்துவமனைக்கு வந்து போலிசார் என் கணவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த சமயத்தில் நான் அங்கு இல்லை. என் கணவரிடம் வாக்குமூலம் வாங்கியதாக என் கொழுந்தனார் சொன்னார். என் கணவருக்கு எந்தவொரு நிதானமும் இல்லாமல் இருந்ததால் என் கணவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக திருச்சி நியுரோ மருத்துவமனைக்கு என் கணவரை அழைத்து சென்றோம், அங்கு இரண்டு நாள்கள் சிகிச்சையில் என் கணவர் இருந்தார், 3 ம் நாள் 03.10.2019 தேதி 11.26 க்கு என் கணவர் இறந்து விட்டார். ஆலங்குடி போலிசார் திருச்சி மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள்., அப்போது நான் திருச்சி நியுரோ மருத்துவமனையில் இருந்தேன். என் கணவரின் இறப்பால் நான் அழுது கொண்டிருந்தேன், அதனால் நான் மயக்கம் போட்டு அங்கு விழவும் என்னை வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். போலிசார் விசாரிக்கும் போது நடந்த விபரத்தை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.2 | Caste | : | |
| Name | | முருகையா | Age | | |
| Father Name | : | சுப்பையா | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 12.10.2022

**முதல் விசாரணை:—**

ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊர்க்காரர்கள், அவர்களில் ஆறுமுகம் என் தம்பி, நீலகண்டமூர்த்தி என் தம்பி மகன், பழனியம்மாள் என் தம்பி மனைவி ஆவார்கள். 21.09.2019 தேதியன்று சாயுங்காலம் 4.30 மணிக்கு என் மகன் பாண்டிச்செல்வம் என் மருமகள் தேதி, நானும் எங்களுடைய வீட்டில் இருக்கும் போது வீடு கட்டுப்பா என்று என்னிடம் என்னிடம் என் மகன் கேட்டான், அதற்கு நான் 5 வருடமாக பாதை பிரச்சினை இருக்கிறது, அதாவது எனக்கும் என் தம்பி ஆறுமுகம் 5 வருடமாக பாதையில் வீட்டைக் கட்டிக் கொண்டு பாதை பிரச்சினை இருப்பதால் இப்போது நீ வீடு கட்ட சொல்லுகிறாயே, வீடு கட்டுவது என்றால் மணல் போன்றவை பாதையில் தான் கொண்டு வர வேண்டும் பாதை இல்லையே என்று சொன்னேன், ஆறுமுகம் மகன் நீலகண்டமூர்த்தி சொல்லாத வார்த்தைகளை சொல்லி தேவுடியா பயலே உனக்கு எங்கடா பாதை இருக்கு என்று நீலகண்டமூர்த்தி அயிட்டம் 2 இரத்தக்கறை படிந்த 82 செ.மீ. ஆர்எஸ்பதி கட்டையை எடுத்து என் மகன் பாண்டிச்செல்வத்தின் பின்மண்டையில் 2 அடி அடித்ததால் என் மகனுக்கு பின் மண்டையில் காயம் ஏற்பட்டு என் மகன் பாண்டிச்செல்வம் மயங்கி கீழே விழுந்தான், நானும் என் மருமகளும் அப்பா விழுந்திட்டியே என்று கத்திக் கொண்டு நான் என் மகனை தூக்கி அணைக்கும் போது ஏன்டா என் மகனை அடிக்கிறாய் கேட்டுக்கொண்டிருக்கும் போது ஆறுமுகமும் பழனியம்மாவும் நீலகண்டமூர்த்தியும் சேர்ந்து என்னை முகத்தின் வலது பக்கமும் மேலும் என் மகனை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கம்பால் அடித்தார்கள், எதிரி ஆறுமுகம் என்னை கட்டையால் நெற்றியில் அடித்தார், நீலகண்டமூர்த்தி என்னை கட்டையால் இடது தோள்பட்டையில் அடித்து இடது தோள்பட்டை இறங்கி விட்டது, நீலகண்டமூர்த்தியும் ஆறுமுகமும் உங்களை அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார்கள். நான் அலறிக்கொண்டு இருக்கும் போது யாரும் வந்து எங்களை தூக்க வரவில்லை, பின்னிட்டு எனது நண்பர் ரெங்கசாமி மகன் மாரிமுத்துவும் பழனிசாமியும் ஆகிய இருவரும்

அங்கு வந்தார்கள், நான் கொஞ்சம் நிதானமாக இருந்ததால் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து கொண்டு என் மகனை என் முன்பாக உட்கார வைத்து கொண்டு பிடித்து கொண்டேன். 1 கி.மீ. தொலைவில் என் மகன் தண்ணீர் தண்ணீர் என்று கேட்கவும் ஆலங்குடி சம்பட்டிவிடுதி சாலை, காத்தான்விடுதி விளக்கு ரோட்டில் என் மகனை இறக்கி தண்ணீர் கொடுத்து பிறகு ஊர்மக்கள் உதவியில் என் மகனை வண்டியில் ஏற்றிக்கொண்டு ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம், என் மகனுக்கு தலையில் பின்பக்க காயத்திற்கு மருந்து வைத்து கட்டு போட்டார்கள், எனக்கும் நெற்றி காயத்திற்கு மருந்து போட்டார்கள், என் மகனுக்கு ஊசி போட்டார்கள், என் மகனுக்கு பலத்த காயம் இருந்ததால் ஆலங்குடி மருத்துவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் படி சொல்லியிருந்தாலும் நான் என் மகனை தஞ்சாவூர் வினோதகன் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன், என்னை விட என் மகனுக்கு தான் பலத்த காயம். தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் என் மகனுக்கும் எனக்கும் சிகிக்சை அளித்தார்கள், எனக்கும் பின்மண்டையிலும் வலது நெற்றியிலும், இடது தோள்பட்டையிலும் எதிரிகள் அடித்ததால் காயம் ஏற்பட்டது. என் மகனை எதிரி நீலகண்டமூர்த்தி அடித்த மேற்படி 82 செ.மீ. ஆர்எஸ்பதி கட்டை சான்று பொருள் 1 ஆகும். (எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது) மேற்படி என் மகனை நீலகண்டமூர்த்தி தாக்கிய கட்டையை தான் பார்த்தேன், நான் என் மகனை தூக்கிக்கொண்டிருந்ததால் என்னை எதிரிகள் நீதிமன்றத்தில் காட்டப்படும் எந்த கட்டைகளால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் எனக்கு 22ம் தேதி காலை 6.30 மணிக்கு நினைவு வந்தது. உடனே என் மகனை எங்கே என்று கேட்டு, என் மகனை பார்க்க வேண்டும் என்று கூறினேன், அப்போது பார்க்க கூடாது என்று அங்குள்ள மருத்துவமனை ஊழியர்கள் சொன்னார்கள், நான் போய் கண்ணாடி வழியாக என் மகனை பார்த்த போது முன் நெற்றியில் இருந்து பின்பக்கம் வரை வலது பக்கம் முழுவதும் ஆப்பரேசன் செய்து 43 தையல் போட்டிருந்தார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டேன். 22.09.2019ம் தேதியன்று மதியம் 12.00 மணிக்கு ஆலங்குடி போலிசார் வினோதகன் மருத்துவமனைக்கு வந்து என்னை நேரில் பார்த்தார்த்தார்கள், என் மகனுக்கு அப்போது நிதானம் இல்லை, நான் நிதானமாக இருந்ததால் நடந்த விபரங்களை சொன்னேன், என் மகனுக்கு நல்ல சுவாசம் வந்த பிறகு சொல்லுங்கள் நாங்கள் வந்து விசாரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு போனார்கள், 27.09.2019 தேதியன்று காலை 9.00 மணிக்கு ஆலங்குடி போலிசார் வினோதகன் மருத்துவமனைக்கு வந்தார்கள், என் மகனிடம் போலிசார் விசாரித்தார்கள், என் மகன் நடந்ததை சொன்னார், போலிசார் வந்து சென்ற பிறகு என் மகன் அன்று இரவு மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் பேசிக்கொண்டிருந்தார், மேற்கொண்டு சிகிச்சை அளித்து எஎன் மகனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் ஊருக்கு வந்து பணம் வாங்கி கொண்டு போய் என் மகனை 01.10.2019 அன்று திருச்சி நியுரோ மருத்துவமனையில் சேர்த்தேன். அங்கு என் மகனுக்கு சிகிச்சை அளித்தார்கள், எங்களை உள்ளே போய் பார்ப்பதற்கு

அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள், பின்னிட்டு 03.10.2019 அன்று 11.26 மணிக்கு என் மகன் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு ஆலங்குடி காவல் நிலையத்திற்கு என் மகன் இறந்துவிட்ட விபரத்தை சொல்லி தெரியப்படுத்தினேன், ஆலங்குடி போலிசார் திருச்சி நியுரோ one மருத்துவமனைக்கு 4.30 மணிக்கு வந்துவிட்டார்கள். என்னுடைய மகன் பிரேதத்தை போலிசார் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்துஇருந்தார்கள். 04.10.2019 தேதியன்று சலடக்கூராய்வு செய்தார்கள், என் மகனுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறது. என் மகன் பிரேதத்தை எடுத்துக்கொண்டு சாயுங்காலம் வீட்டிற்கு வருவதற்கு 6.00 –6.30 மணி ஆகிவிட்டது. திருச்சியில் என் மகன் பிரேத விசாரணை சம்மந்தமாக என்னை கேட்டார்கள், இறந்தவர் என் மகன் என்று சொன்னேன், போலிசார் விசாரிக்க விபரம் கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.3 | Caste | : | |
| Name | | மாரிமுத்து | Age | | |
| Father Name | : | ரெங்கசாமி | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 12.10.2022

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊர்க்காரர்கள். 21.01.2019 தேதியன்று 4.45 மணிக்கு நான் கோழிப்பண்ணையில் நான் என்னுடைய வேலையை பார்த்துக் கொண்டிருந்தேன். பாண்டிச்செல்வத்தின் அப்பா முருகையா அனுப்பியதாக சொல்லி ஒரு நபர் நான் வேலை பார்த்து கொண்டிருந்த கோழிப்பண்ணைக்கு வந்து கோழிப்பண்ணையில் யார் இருந்தாலும் அங்கு அழைத்து வர சொன்னதாக தகவல் சொன்னார், பாண்டிச்செல்த்தின் இருசக்கர வாகனத்தையும் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். நான் இருசக்கர வாகத்தில் பாண்டிச்செல்வத்தின் வீட்டிற்கு சென்றேன், பாண்டிச்செல்வத்தின் தலையின் பின்புறம் இரத்தம் வந்து கொண்டிருந்தது. பாண்டிச்செல்வத்தின் தகப்பனார் என் பிள்ளையை காப்பாற்ற வேண்டும் என்று வண்டியை எடு என்று சொன்னார், இருசக்கர வாகனத்தை நான் ஓட்டினேன், எனக்கு பின்னால் பாண்டிச்செல்வத்தை உட்கார வைத்துக் கொண்டு அவருக்கு பின்னால் அவருடைய அப்பா முருகையா உட்கார்ந்து கொண்டு பாண்டிச்செல்வத்தை பிடித்து கொண்டார். இடையில் அவர் போகும் போது காத்தான் விடுதி பஸ் நிறுத்தத்தில் நிறுத்த சொன்னார்கள், பாண்டிச்செல்வம் உடனே எனக்கு மயக்கமாக வருகிறது என்றும் சிறிது நேரம் படுத்து விட்டு வருவதாகவும் சொன்னார், அப்போது சிறிது நேரம் பஸ் ஸ்டாப்பில் பாண்டிச்செல்வத்தை படுக்க வைத்தோம், அது சமயம் என் அண்ணன் பாண்டிச்செல்வத்தின் மனைவியை அழைத்து கொண்டு வந்தார், மேலும் எங்கள் ஊரைச் சேர்ந்த சுதாகர் என்பவரும் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தார், உடனே அவர்கள் இன்னமும்

தாமதப்படுத்தாமல் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள், அவ்வாறு அழைத்து செல்லும் போது பாண்டிச்செல்வம் என் மீது சாய்ந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் வந்ததால் என் மீது வாந்தி எடுத்தார் என் சட்டை முழுவதும் பின்பக்கம் பட்டிருந்தது. மருத்துவமனையில் பாண்டிச்செல்வத்தை சேர்க்கும் போது நான் தான் விபரம் சொன்னேன். பாண்டிச்செல்வம் வாந்தி எடுத்ததால் என் சட்டை மீது பட்டிருந்ததால் பின்னிட்டு நான் வீட்டிற்கு வந்து சுத்தப்படுத்திக்கொண்டேன்., பின்னிட்டு நான் போகவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

முருகையா மகன் பாண்டிச்செல்வம் என்பவருக்குதிருமணம் ஆகி தேவி என்ற மனைவியும் வாணிப்பிரியா என்ற 3 வயது பெண் குழந்தையும் ஒன்பது மாத ஆதிகேசவன் என்ற ஆண்குழந்தையும் இருக்கிறார்கள் என்றும் பாண்டிச்செல்வம் குடும்பத்திற்கும் அவரது சித்தப்பா ஆறுமுகம் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்தது தெரியும் என்றும் 21.09.2019 ம் தேதியன்று மாலை சுமார் 4.30 மணியளவில் நானும் எனது அண்ணன் பழனிச்சாமி என்பவரும் பாண்டிச்செல்வம் வீட்டின் வழியே சொந்த வேலைக்காக சென்றோம் என்றும் அப்போது பாண்டிச்செல்வம், அவரது மனைவி, பாண்டிச்செல்வத்தின் தகப்பனார் அனைவரும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அது சமயம் அங்கு வந்த ஆறுமுகம் அவரது மனைவி பாண்டியம்மாள் ஆறுமுகத்தின் மகன் நீலகண்டமூர்த்தி ஆகியோர் கீழே கிடந்த விறகு கட்டையை கையில் வைத்துக் கொண்டு பாண்டிச்செல்வத்தையும் அசிங்கமாக பேசினார்கள் என்றும் எங்கடா உங்களுக்கு இங்க பாதை இருக்கிறது என்று கூறியும் உங்கள் இருவரையும் கொல்லாமல் விடமாட்டேன்டா என்று விறகு கட்டையால் பாண்டிச்செல்வத்தின் தலையில் பின்பக்கம் ஓங்கி அடித்தார் என்றும் பழனியம்மாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த கம்பால் நெஞ்சுப்பகுதி மற்றும் இடுப்புப்பகுதி ஆகிய இடங்களில் அடித்தார் என்றும் இதில் அவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அப்படியே மயங்கி விழுந்து விட்டார் என்றும் இதை கண்ட தேவியும் முருகையாவும் அய்யோ என அலறிக்கொண்டு அவர்களை தடுத்த போது அவர்கள் மூவரும் அவர்கள் கையில் இருந்த கட்டையால் முருகையாவை வலது நெற்றி மற்றும் இடது

தோள்பட்டையில் ஓங்கி அடித்தார்கள் என்றும் நாங்கள் பதறி போய் அவர்கள் அருகே ஓடினோம் என்றும் அப்போது அவர்கள் மூவரும் 3 பேரையும் கொல்லாமல் விட மாட்டேன் என்று கூறினார்கள் என்றும் நான் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்து மேல் சிகிக்கைக்காக தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் பின்னர் 01.10.2019 ம் தேதியன்று திருச்சிராப்பள்ளி நியுரோ one தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சையில் பாண்டிச்செல்வம் இருந்து வந்து 03.10.2019 ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு பாண்டிச்செல்வம் இறந்து விட்டார் என்றும் மேற்படி விபரங்களை கடந்த 10.04.2019 ம் தேதியன்று காவல் வட்ட ஆய்வாளர் திருச்சிராப்பள்ளி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து சவக்கிடங்கில் வைத்து என்னை விசாரிக்க நான் பாண்டிச்செல்வத்தின் பிரேத விசாரணையின் போது உடனிருந்து விபரம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*